நியாயவிலைக் கடைகள்

* 333 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு –வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழகத்தில் ஒவ்வொரு ஆதித்திராவிடர்கள் வசிக்கும் காலனியிலும், நியாயவிலைக் கடைகளை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆதித்திராவிடர்கள் என்று சொல்லக் கூடிய நேரத்திலே, சகலத் துறைகளிலும் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அவர்களுக்கு எல்லாப் பிரச்சினைகளிலும் சலுகைகள் கொடுக்கப் பட்டு வருகின்றன. ஆகவே, அவர்களுக்கு நியாய விலைக் கடைகளை அமைக்காவிட்டாலும், படி அரிசித் திட்டத்தையாவது அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது சில இடங்களில் ஸ்டாசுடரி ரேஷன், இன்பார்மல் ரேஷன் போன்ற முறைகள் இருந்து வருகின்றன. அதுவல்லாமல், வேறு எங்காவது குடும்பக் கார்டு முறை தேவை என்றால், அதை மாவட்டக் கலெக்டர் நிலைமைக்குத் தக்கவாறு ஏற்பாடு செய்கிறார்கள். உணவுப் பொருள்கள் அரிஜனங்களுக்குக் கொடுக்க வில்லை என்கிற வாதமே தவறானது. எங்கெல்லாம் ஸ்டாசுடரி ரேஷன் இருக்கிறதோ, அங்கெல்லாம் அரிசன மக்கள் அளவு அரிசியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது அரிசனக் காலனிக்குத் தேவை என்று இருந்தால், அவசியம் என்றிருந்தால், அதைக் கலெக்டர்மூலமாக எழுதியனுப்பினால், அங்கேயிருக்கும் இன்றியமையாத் தன்மைக்கு ஏற்ற வாறு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10–00

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய காரணத்தால், தருமபுரி ஜில்லாவிலே, புஞ்சை தானியங்கள்தான் சாகுபடி செய்யப்படுகின்றன. அதுவும் விவசாயக் கூலிகளுக்குக் கிடைக்க வில்லை. ஆகவே, புஞ்சை தானியத்தை வினியோகம் செய்ய சர்க்கார் முன் வருமா? எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, கடற்கரை ஓரப் பகுதியிலும், மணற்பாங்கான பகுதியிலும் வாழும் மீனவர்களும் மற்ற இன மக்களும் விவசாயத்தில் ஈடுபடவில்லை. எனவே, அங்குள்ள மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இல்லாவிட்டாலும், விலைகளைக் கட்டுப்படுத்தி நியாய விலைக் கடைகளைத் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முன்பே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நிலைமைகளைக் கண்டறிந்து, எங்கெங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம், அதற்கு எங்கெங்கே அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அடிக்கடி அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து வருகிறார்கள். அவர்களிடத்திலே அங்கத்தினர் நிலைமையை விளக்கினால், அதற்கான நியாயங்களைக் கூறினால் அதன் அவசியத்தைப் பொறுத்து, அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

Ban on service of cereal dishes

* 334 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —